# மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்



(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)

4வது சுழற்சியில் A++ தரத்துடன் NAAC ஆல் மீண்டும் அங்கீகாரம் பெற்றது

சேர்க்கை அறிவிப்பு 2022-2023

(எண்.R67/MKU/ADC/2022-2023)

## கையேடு

1966 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மதுரை காமராசர் பல்கலைக்கழகம் தேசிய தரமதிப்பீட்டுக் குழுவின் (NAAC) 4வது சுழற்சியில் (2021) A++ என்னும் தகுதியினைப் பெற்றுள்ளது. **"கல்வி உலக இந்தியா"** என்னும் அமைப்பு நடத்திய ஆய்வில், அரசின் பல்துறை பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் (2022) மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அகில இந்திய அளவில் 9வது இடத்தையும், தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் முதல் இடத்தையும் பெற்றுள்ளது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை மாவட்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமப்புற மாணவர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சமூக அக்கறையுடனும், கிராமப்புற பெண்களுக்கு அறிவைப் பரப்புவதன் மூலம் அதிகாரம் அளிக்கும் நோக்கத்துடனும் செயல்படுகிறது. 2022-2023 கல்வியாண்டு முதல் தமிழ், ஆங்கிலம், வணிகம், வணிக மேலாண்மை, கணிதம் மற்றும் உளவியல் ஆகிய துறைகளில் இளங்கலைப் பட்டப்படிப்புகளை (UG) பல்கலைக்கழகம் வழங்க உள்ளது. பல்கலைக்கழகத்தின் தொலைநோக்கு மற்றும் இலக்குகளுடன் இளங்கலைப் பட்டப்படிப்புகள் வழங்கப்படுகின்றன. இளங்கலைப் பட்டப்படிப்புகள் பருவ முறையின் கீழ், தன்மதிப்பீட்டுத் தேர்வு முறை அடிப்படையில் (CBCS) பின்பற்றப்படவிருக்கின்றன. புகழ் பெற்ற பேராசிரியர்கள் மற்றும் திறமை வாய்ந்த ஆராய்ச்சியாளர்கள் நவீன கற்பித்தல் முறைகளைக் கையாண்டு பயிற்சி அளிக்கின்றனர்.

மேற்கண்ட இளங்கலைப் பட்டப்படிப்புகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், மாணவர்கள் சோதனை முறைக் கற்றலைப் பெற்றுக் கொள்ளவும், பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள அனைத்து வசதிகளையும் பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். இது

இளங்கலைப் பட்டப்படிப்பு மாணவர்கள், தங்கள் எதிர்கால முதுகலை படிப்புகள் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை தொடர்வதற்கு வழி வகுக்கும். திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், தொழில் மேம்பாட்டுப் படிப்புகள், சிறப்புக் கணினிப் படிப்புகள் மற்றும் அயலக மொழிப் படிப்புகள் ஆகியவை கலப்புக் கற்றலுக்கான வாய்ப்புகளாக இளங்கலை மாணவர்களுக்கு வழங்கப்படும். மாணவர்கள் வேலை தேடுபவர்களாக அல்லாமல், முதலாளிகளாக உருவாக்கப்படுவார்கள். பல்கலைக்கழகத்தில் உள்ள தொலைதூரக் கல்வி படிப்புகள் இரட்டைப் பட்டங்களைப் பெறுவதற்கானச் சிறந்த வாய்ப்பை வழங்கும். கூடுதல் மதிப்பீட்டைப் பெறுவதற்கான மற்றொரு சிறந்த வாய்ப்பாக கல்வி வங்கி மதிப்புகள் இருக்கும்.

### இளங்கலை பட்டப்படிப்புகள் (ஆறு பருவங்கள்)

1. இளங்கலைத் தமிழ் (B.A.  Tamil)
2. இளங்கலை ஆங்கிலம் (B.A. English)
3. இளங்கலை வணிக மேலாண்மை (B.B.A.)
4. இளங்கலை வணிகவியல் (B.Com.,)
5. இளம் அறிவியல் கணிதம் (B.Sc. Mathematics)
6. இளம் அறிவியல் உளவியல் (B.Sc. Psychology)
7. இளநிலை தொழில் திறன் - மீன் வளர்ப்பு (B.Voc.) –Aquaculture
8. இளநிலை தொழில் திறன் – நிலைத்த  மேலாண்மை மற்றும் வர்த்தக மேம்பாடு (B.Voc.) - Sustainable Farming and Enterprise Development
9. முதுகலை வணிக மேலாண்மை – சுற்றுலா மற்றும் ஹோட்டல் மேலாண்மை M.B.A. Tourism and Hotel Management (ஐந்தாண்டுகள் ஒருங்கிணைந்தது)

கீழே உள்ள இணைப்பை நகலெடுத்து வலைத்தளத்தில் இணைக்கவும்.

https://cdn3.digialm.com/EForms/configuredHtml/2570/77643/Registration.html

உதவிக்கு:  0452-2458471 Extn: 293,218

7353283555